80—

கிருட்டிணகிரி அணையில் மீன் பிடித்தல் விவரம்.

***21983-திரு. கே. முனிவெங்கடப்பன் :**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி அணையில் ஒரு ஆண்டிற்கு எத்தனை டன் மீன் பிடிக்கப்படுகின்றது ?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு ?

(இ) அதை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 74 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

(ஆ) அதன் மதிப்பளவு ரூபாய் 2,31,122.00

(இ) கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் மீன்வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்தோடு விரைவில் வளரும் மீன்குஞ்சுகள் இருப்புச் செய்து வளர்த்தல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையில் ஆண்டுதோறும் மீன்களை ஏலம் விட்டால் அரசுக்கு அதிகமான வருமானம் வர வாய்ப்பு இருக்கும். அங்கே மீன் பிடிப்பவர்கள், பாதி மீன்கள் அதைப் பிடிப்பவர்களுக்கும், பாதி மீன்கள் அரசுக்கும் என்று கொடுத்து வருகிறார்கள். ஆகவே அதை ஏலம் விடும் பரிசீலனை அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுடைய வாழ்க்கையில் பொருளாதார நிலையில் அவர்கள் உயரவேண்டும் என்பதற்காகவே, அங்கே பிடிக்கப்படுகின்ற மீன்களை பங்கு முறையில் விற்று, தங்களுடைய பொருளாதாரத்தை உயர்த்தவேண்டும் என்பதற்காகவே இந்த முறை இருக்கிறது. ஏல முறை

1994 நவம்பர் 9]

கொண்டு வந்தால் ஒருசிலருடைய இலாபத்திற்காகவே அது செயல்படுவதாகவே இருக்கும். எனவே இந்தக் கருத்தை அரசு ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தர்மபுரி மாவட்டத்தை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்ற மாவட்டமாக மாற்றிவருகிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, மாவட்டத்தில் உள்ள அனைவரும் தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு அத்தனை துறைகளிலும் வேலை கொடுப்பதற்கும், சுயமாக வேலைகள் துவங்குவதற்குப் பல துறைகளிலும் புரட்சித் தலைவி அவர்கள் பல பயிற்சிகளையும் கொடுத்து வருகிறார்கள். அதேமாதிரி மீன் வளர்ச்சித் துறையில் உள் நாட்டிலேயே மீன் வளர்ப்பதற்கான பயிற்சியை-ஊக்கத் தொகையுடன்-இந்த அணையிலேயே கொடுப்பதற்கும் புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விரைவாக வளரக்கூடிய கட்லா, மிர்கால், ரோகு, சாதா கெண்டை, புலி கெண்டை போன்ற மீன்கள் எல்லாம் வளர்ப்பது நல்ல இலாபத்தைத் தரக்கூடிய ஒரு தொழில் ஆகும். அந்த அடிப்படையிலே அந்தத் தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவே நம்முடைய போற்றுதலுக்குரிய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏறக்குறைய ஒரு ஹெக்டேர் குளம் வெட்டினால் 20 ஆயிரம் ரூபாய் அளவுக்கு மானியம் கொடுத்து உதவுகின்றார்கள். இன்றைக்குக்கூட, படித்துவிட்டு எவ்வளவோ இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மீன் வளர்ப்பிலே ஈடுபட்டால் நிச்சயமாக நம்முடைய பொருளாதாரமும் உயரும்; அதேநேரத்திலே சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே அவர்களும் உயருவார்கள் என்பதைச் சொல்லி, அப்படிப்பட்ட அந்தக் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குக் கொடுப்பார்களேயானால், நிச்சயமாக அரசு அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.